**நகர செயற்திட்ட தயாா்ப்படுத்தல் வசதி - 2020**

---

நகர செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதியின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 17 ஆம் திகதிய 3706 எஸ்ஆர்ஜ (சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சாகவிருந்த தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் 09 மாகாணங்களின் மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. முன்னுரிமை நகர செயற்திட்டங்களிற்காக உயர் மட்ட தயார்நிலையை அடைந்துகொள்வதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,879 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 12.20 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 1,540 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 10 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 338.85 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 12.20 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்டது. அதில் ரூபா 884 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 5.74 மில்லியன் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் ரூபா 995 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 6.46 மில்லியன் மிகுதி தொகை மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 யூன் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் அட்டவணை 02 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர்த்து செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக

ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இரண்டாம் நிலை நகரங்களின் நிலைபேறான அபிவிருத்தி செயற்திட்டம் குழாய்வரிசை செயற்திட்ட பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருந்ததன் காரணமாக நகர செயற்திட்ட தயார்படுத்தல் வசதி செயற்திட்டத்தின் செயற்பாடுகள் அரைவாசியிலேயே முடிவுறுத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 25 உள்ளூராட்சி சபைகளின் நகர்ப்புற உட்கட்டமைப்பின் விபரமான செயற்திட்ட அறிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமல் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 176.36 மில்லியன் தொகையான அபிவிருத்தி செலவினங்கள் நடைமுறையல்லாச் சொத்துக்களாகக் காட்டப்பட்டிருந்தன. | 176.36 | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வடிவமைப்பு ஆலோசனையாளர்களால் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்ட ஆறு பிரதியிடும் இயந்திரங்கள் (photocopiers) மற்றும் ஆறு கணனிகள் நிதியாண்டின் இறுதியில் வரிசை அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட போதிலும், அந்த சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் அபிவிருத்தி செலவினங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன. | 3.65 | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | நிதிக்கூற்றுக்களை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | குழாய்வரிசை செயற்திட்டப் பட்டியலிலிருந்து இரண்டாம் நிலை நகரங்களின் நிலைபேறான அபிவிருத்தி செயற்திட்டம் நிறுத்தப்பட்டதன் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இச் செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்ட போதிலும் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு அடிப்படையை கருத்தில் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. | - | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | செயற்திட்டத்தின் செயற்பாடுகள் மூடப்பட்டதும் கலைப்பு கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை | செயற்திட்ட வழிகாட்டல் குழுக் கூட்டங்கள் 02 மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் இந்த ஆண்டின் போது ஒரு கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் கூட்டம் ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை | ஐக்கிய அமெரிக்க டொலர் 5 மில்லியன் கிரயமான செயற்திட்டத்தில் பணிபுரிகின்ற செயற்திட்ட பணிப்பாளரிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்திட்ட பணிப்பாளருக்கு மாதாந்த சம்பளம் ரூபா 60,000 ஆக ரூபா 960,000 கூட்டுமொத்தமான மேலதிகக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | சம்பளக் கொடுப்பனவு தொடர்பாக மேலும் பரீட்சிக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டியதுடன் மேலதிகக் கொடுப்பனவுகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை | புற நெகும செயற்திட்டத்தின் நிதி பகுப்பாய்வாளர் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக பதிற்கடமை அடிப்படையில் இச் செயற்திட்டத்தின் கணக்காளராக நியமனம் செய்யப்பட்டதன் மூலம் அவருக்கு ரூபா 675,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இந்த உத்தியோகத்தர் செயற்திட்டத்தின் நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தற்காலிகமாக சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார். சம்பளக் கொடுப்பனவு தொடர்பாக மேலும் பரீட்சிக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டியதுடன் மேலதிகக் கொடுப்பனவுகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2019 சனவரி 12 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் ஒழுங்காக நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் ஒழுங்காக நடாத்தப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடன் கிடைப்பனவு தன்மை மற்றும் நாட்டில் காணப்படக்கூடிய நிதி இடைவெளி காரணமாக, இரண்டாம் நிலை நகர நிலைபேறான அபிவிருத்தி செயற்திட்டம் அரசாங்கத்தால் குழாய்வரிசை செயற்திட்டப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, நகர செயற்திட்டத் தயார்படுத்தல் வசதி செயற்திட்டம் அமைச்சால் அபிவிருத்தி செலவினங்களுக்காக ரூபா 176 மில்லியன் செலவிடப்பட்ட பின்னர் அரைவாசியில் முடிவுறுத்தப்பட்டன. ஆகையால் செயற்திட்டம் தொடர்பாக ஏற்பட்ட செலவினங்கள் பயனற்றதாகியிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வடிவமைப்பு மற்றும் பெறுகை ஆலோசனை கம்பனி 2019 ஆகஸ்ட் 03 இல் கைச்சாத்திட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் கீழ் 2019 நவம்பர் 11 இல் பணிக்கமர்த்தப்பட்டது. இந்த உடன்படிக்கைக்கு இணைக்கப்பட்ட வேலை அட்டவணையின் பிரகாரம் அனைத்து வேலைகளும் 2020 திசெம்பர் 31 இற்கு முன்னர் பூர்த்திசெய்யப்பட்டு செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்கு வழங்கப்படக்கூடியவை கையளிக்கப்பட வேண்டும். எனினும், செயற்திட்ட காலப்பகுதியினுள் ஆலோசனை கம்பனியால் போதியளவு செயன்முன்னேற்றம் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | இறுதிக் கொடுப்பனவிற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட வேலையை மதிப்பிடுதல். |